**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு**
**புள் இருக்கு வேளூர் என்னும் வைத்தீஸ்வரன் கோயில் [செவ்வாய் ஸ்தலம்]**

---

**புள்** என்றால் பறவை. ராமாயண காலத்தில் வாழ்ந்த ஜடாயு - சம்பாதி ஆகிய கழுகுச் சகோதரர்கள் இவ்வூர் இறைவனையும் தேவியையும் வழிபட்டனர். அதன் மூலம் பறவைகளாய் இருந்தும் மனிதர்களுக்கு ஏற்படும் உயர்ந்த விழிப்புணர்வைப் பெற்றனர். அதனால் தங்களால் முடிந்த சேவைகளை உலகிற்குச் செய்தனர்.

*ஜடாயு: சீதையை ராவணன் இடம் இருந்து காப்பாற்றிடப் போரிட்டார்.
* சம்பாதி: சீதை இலங்கையில் அசோக வனத்தில் இருப்பதைப் பார்த்து உறுதி செய்து அனுமானை வழிப்படுத்தினார்.

**இருக்கு [ரிக் வேதம்]**
வியாச மஹரிஷி நான்கு வேதங்களையும் தொகுத்த பின் இக்கோயில் இறைவன் முன் வைத்து பூஜித்த பின்னரே சமூகத்திற்கு எடுத்து விளக்கினார். அதனால் ரிக் வேதமே இறைவனைப் பூஜித்து தன் வேத அந்தஸ்தைப் பெற்றதாக முன்னோர் உருவகம் செய்தனர்.

**வேளூர்** - முருகனுக்கு "செவ்வேள்" என்ற பெயர் உண்டு. முருகன் மிகவும் விசேஷமாக இத்தலத்தில் பூஜிக்கப்படுகிறார்.

**வைத்தீஸ்வரன் கோயில்:** உடல் பிணியை குணம் செய்யும் மருத்துவர் வடிவில் இறைவன் இருக்கிறார். அதனால் தான் உலகில் மிக முக்கிய மூன்று தொழில்களான ஆசிரியர், உழவர் மற்றும் மருத்துவர் தொழிலை முன்னோர் போற்றுகின்றனர். அந்த வைத்தியர்களுக்குள் விழிப்புணர்வாக இருந்து நோயாளியின் வியாதிக்கான மூல காரணத்தை அறிந்து குணம் செய்கிறார் இறைவன். மருத்துவர்களுக்கு ஒரு போதும் "தான்" என்ற ஆணவம் வரவே கூடாது. அவர்தம் மருத்துவ அறிவாக இருந்து அவர்களுக்கே மருத்துவ வழிமுறைகளை இறைவன் காட்டுவதால் "வைத்தீஸ்வரன்" என்ற பெயர் பெறுகிறார்.

**பிறவி என்ற மிகக் கொடிய வியாதியை குணம் செய்யும் உலகின் ஒரே மருத்துவர் இவரே! அதனால் தான் இவர் "சகல வைத்தியர்களுக்கும் தலைவன்" என்ற பொருளின் வைதீஸ்வரனாகப் போற்றப்படுகிறார்.**

**சோமாஸ்கந்த ஸ்தலம்:**
சிவனுனுடன் பார்வதியும் நடுவில் முருகனும் ஒன்று சேர அமர்ந்திருக்கும் காட்சியை "சோமாஸ்கந்தம்" என்று சிற்பசாஸ்த்ரம் போற்றுகிறது.பொதுவாக சகல சிவஸ்தல உற்சவர்கள் சோமாஸ்கந்த மூர்த்தியாகத்தான் இருக்கும்.
சிவமாகிய சித்தும் தேவியாகிய அசித்தும் இணைவதால் ஏற்பதும் ஆனந்தமே முருகன். சிவம் என்ற மெய்யுணர்வை நம் சக்தி உணர்கிறது., முறையான ஆன்மீகப் பயிற்விகள் மூலம் மெய்யுணர்வுடன் இரண்டறக் கலக்கிறது. அந்த நிலையில் இணையற்ற ஆனந்தம் உருவாகிறது. அதுவே முருகன். அந்த ஆனந்தமும் நிலைக்க வேண்டுமானால் தன்னலமே இல்லாமல் சேவைகள் செய்து அதன் மூலம் இறைமையை நம்முள் உணர வேண்டும்.
இந்த தத்துவத்தை இக்கோயில் உருவகம் செய்து மூன்று சன்னிதிகள் மூலம் உணர்த்துகிறது.

**தையல்நாயகி:**
இக்கோயிலில் பார்வதி ஸ்ரீதையல் நாயகி - ஸ்ரீபாலாம்பிகை - ஸ்ரீ தைலாம்பாள் என்று போற்றப்படுகிறாள்.பல மூலிகைகளைக் கொண்டு காய்ச்சப்பட்ட தைலக்கட்டினால் தேவியின் மூல விக்ரஹம் உருவாக்கப்பட்டு இருக்கிறது.

"தையல்" என்றால் பெண். ஒரு குடும்பப் பெண் எப்படி இருக்க வேண்டும் என்று இவள் முன் உதாரணமாக இருக்கிறாள். பெண்களுக்குத் தலைவியாய், வழிகாட்டியாய் இவள் இருக்கிறாள்.

அன்னை தன் மேல் இடது கையில் செந்தாமரையும் மேல் வலது கையில் அக்ஷரமாலையும் ஏந்தி தன்னுள் மஹாலக்ஷ்மி - மஹாசரஸ்வதி இருவரின் சக்திகளையும் கொண்டு முப்பெரும் தேவியராய்க் காட்சி தருகிறாள்.

**இரும்பைப் போல் தாலி பலம் வேண்டுமா?**
அம்பிகை மிக முக்கியமாக இரும்பினால் செய்யப்பட்ட திருமாங்கல்யத்தை அணிந்திருக்கிறாள். பெண்கல் தங்கள் மாங்கல்ய பலம் இரும்பைப் போல் இருக்க வேண்டும் என்ற உணர்ச்சியை இம்மாங்கல்யம் குறியீடாக உணர்த்துகிறது.

**ஸ்ரீமுத்துக்குமார ஸ்வாமி:**
தேவிக்கும் சிவனுக்கும் இடையில் முருகன் "ஸ்ரீமுத்துக்குமார ஸ்வாமி" என்ற பெயருடன் மிக அழகான விக்ரஹமாக பல பொன் நகைகளை அணிந்து ஸ்ரீவள்ளி - தேவயானையுடன் அருள்கிறார். இவருக்கே இத்தலத்தில் அதிக முக்கியத்துவமும் உண்டு. காரணம் இவர் அன்பர்களின் மனக்குறைகளை

போக்குவதில் வல்லவர். இவர் குழந்தைப்பேற்றை அருள்வதில் மிக ப்ரசித்தி பெற்றவர்.

**தீக்ஷிதரை சங்கீத உலகிற்கு அளித்த முருகன்:**
சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவர் ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதர். அவரது பெற்றோர் பல காலம் இம்முருகனை இக்கோயிலிலேயே இருந்து பூஜித்து விரதங்கள் இருந்து அதன் பலனாய் மகனாய்ப் பெற்றனர். அதனால் தான் மகனுக்கு ”ஸ்ரீமுத்துஸ்வாமி” என்றும் பெயர் வைத்தனர். **புதுமணத்தம்பதியினர் நல்ல ஒரு குடிமகனை - மகளைத் தாங்கள் உலகிற்கு ஈன்று வளர்த்து அளிக்க வேண்டும் என்று வரம் வேண்டுதல் மிகவும் நன்மை தரும்.**

இவர் இவ்வூர் இறைவனையும் தேவியையும் முருகனையும் தன் அழகிய சம்ஸ்க்ருத கீர்த்தனைகளால் பாடிப்போற்றியும் இருக்கிறார்.

**மண்ணானாலும் அருமருந்தே!**
மூன்று தெய்வங்களின் அருளுடன் தயாரிக்கப்படும் இக்கோயிலில் திருமண் மருந்து உருண்டைகள் மிகவும் ப்ரசித்தமான ப்ரசாதம் என அன்பர்களால் மதிக்கப்படுகின்றது.மண்ணானாலும் உயர்ந்த மருந்துக்கம்பெனியின் மருந்தானாலும் அதில் உள்ள ‘னோய் தீர்க்கும் தன்மை மெய்யுணர்வாகிய இறைவனின் செயலே! அதை மக்கள் உணர்தல் மிக மிக அவசியம். அதனால் தான் மருந்து உட்கொள்ளும் நோயாளி மிக்க மனநம்பிக்கையுடன் மருந்தை இறைவனாகவே எண்ணி அவன் ப்ரசாதமாக உட்கொள்ளுதல் அவசியம்.

**செவ்வாய் எனும் அங்காரஹன்:**
செவ்வாய் க்ரஹம் தன் பதவியை இவ்வூர் தெய்வங்களைப் பூஜித்தே நிலைநாட்டிக் கொண்டு இருக்கிறது. எந்த ஒரு வியாதியும் ரத்தத்தில் மாற்றம் ஏற்படும் போதே ஆரம்பிக்கிறது. எனவே ரத்தம் சம்பந்தப்பட்ட வ்யாதிகள் வரமால் இருக்க என்ன செய்ய வேண்டும் என்ற மருத்துவ விழிப்புணர்வை இக்ரஹத்தை வழிபடுவதன் மூலம் பெறலாம். சிவந்த நிறத்தை இக்ரஹத்திற்கு அடையாளம் கூறுகிறார்கள் முன்னோர்கள். சிவப்பு என்பது விழிப்புணர்வின் அடையாளமே! எனவே முருகனை அதிதேவதையாகக் கொண்ட செவ்வாய் க்ரஹத்தை வணங்கும் போது அம்முருகனின் பரஞானம் நமக்கு கிடைக்கப்பெறுகிறது. மேலும் தனக்குக் கீழ் ஒரு கூட்டத்தை வழிநடத்திச் செல்லும் திறனும் செவ்வாயின் முக்கிய குணம் ஆகும். நல்ல கொள்கையினைக் கடைப்பிடித்து, ஒழுக்கத்தினைக் கடைப்பிடித்துத் தன்னலம் இன்றி மக்கள் சேவைக்கு என இயங்கும் அனைவரும் செவ்வாயின் இக்குணத்தைக் கொண்டவர்களே!

நன்றி!